# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI

## S.C. No. 434/ 2016

Deposition of witness for PW1

Name : பாண்டி

Father Name :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.07.2026

---

எதிரி தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

**முதல் விசாரணை:-**

நான் உத்தரப்புரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கின் எதிரி எனக்கு மகன் ஆவார். புகார்தாரா் எனது மனைவி ஆவார். அவர் தற்போது இறந்துவிட்டார். எதிரி குடித்துவிட்டு பிரச்சனை செய்ததால், புகார் கொடுக்கப்பட்டது. சம்பவத்தின் போது நான் கேரளாவில் இருந்தேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. இது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தனர். போலீசார் விசாரணையில் எதிரி குடுத்துவிட்டு வந்து பிரச்சனை செய்தது சம்பந்தமாக நான் கூறினேன்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 14.01.2011ம் தேதி காலை 09.00 மணியளவில் நானும், எனது மனைவி காளியம்மாளும் வீட்டில் இருக்கும் போது எதிரி பெரியசாமி கையில் அருவாளுடன் வீட்டிற்கு வந்து, எங்களை பார்த்து அசிங்கமாக பேசி, சொத்தை பிரித்து கொடுக்குமாறு பிரச்சனை செய்து நீங்கள் செத்தாதான் நான் நிம்மதியாக வாழ முடியும் என்று கூறி, கையில் வைத்திருந்த அருவாளால் என் மனைவி காளியம்மாளை கழுத்தை பார்த்து வெட்டினார் என்றும், என் மவைி சற்று விலகிக் கொண்டதால் காயம் எதுவும் ஏற்படவில்லை என்றும், அப்போது சத்தம் போட்டு அருகில் இருந்த வசந்தியும், எங்கள் ஊரைச் சேர்ந்த வாசிமலை மனைவி பாண்யடிம்மாளும், ஓடி வந்து எதிரியை பிடிக்க முயற்ச்சித்த போது எதிரி அருவாளை

குருசாமி காலி இடத்தில் எறிந்துவிட்டு ஓடிவிட்டார் என்றும், பின்னர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.07.30 18:08:17 +0530

**Assistant Sessions Judge,**
**Usilampatti.**